ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1417/12 - 2005 ඔක්තෝබර් 31 වැනි සඳුදා - 2005.10.31

1417/12 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

ச. வ. பீ. - 21/78

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

24அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப் படுவதாகிய 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் இக்கட்டளையின் மூலம் —

2005 ஒற்றோபர் 1 ஆந் திகதி முதல் —

(1) ஆங்கில மொழியில் உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கத்திற்கு நிறுவகமொன்றைத் தாபிக்கின்றேன்; அத்துடன்

(2) அத்தகைய நிறுவகத்திற்கு "ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம்" என்னும் பெயர் மகுடத்தைக் குறித் தொதுக்குகின்றேன்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005, ஒற்றோபர் 24.

11-311



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.